# மணிமேகலைக் காப்பியம் உணர்த்தும் மனிதநேயம்

முனைவர் சி.கல்பனா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.
ஆர் வி.எஸ்.கலை அறிவியல் கல்லூரி. சூலூர், கோவை ,

**ஆய்வுச்சுருக்கம்;**

காப்பியத்தில் மணிமேகலை தலைமைப் பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது. இவள் மாதவியின் மகளாக இருப்பினும் கண்ணகியின் மகளாகவே தன்னை வெளிப்படுத்துகிறாள். இளம் வயதில் துறவு பூண்டு பல அறச்செயலை மேற்கொண்டவள். பெண்களின் வளர்ச்சிக்கும் செயலுக்கும் பாடுபட்டவள் இவள். பசிக்கு மருந்தாய் மாறியதற்கு உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும். பசித்தவர்களுக்கு உணவிடுதல் வேண்டும் என்ற கொள்கையே காரணமாகும். இச்சிறப்பைப் பெற்ற மணிமேகலைக்குப் பெயர் சூட்டும் விழாவில் மாதவியின் கனவில் மணிமேகலாத் தெய்வம் தோன்றி,

**‘காமன் கையுறக் கடு நனவயதுக்கும்**
**மாபெருந்தவக் கொடியின் றனையென்றே’**

மணிமேகலை 10- 4-6

என்றுரைத்தது. காப்பியங்கள் குடும்ப வாழ்க்கையை எடுத்து இயம்புகின்றன. சாத்தனார் இளம்பெண் ஒருத்தியின் துறவு நிலைக்கொண்டு பெருங்காப்பியம் படைத்துள்ளார்.

**முன்னுரை :**

மணிமேகலை இயற்றிய சாத்தனார், மணிமேகலைக் காப்பியத்திற்கு இட்டபெயர் “மணிமேகலைத் துறவு ” இப்பெயர் பிற்காலத்தில் சுருங்கி மணிமேகலை என வழங்கிவருகின்றது. காப்பியத்தலைவியின் பெயரால் அமைந்துள்ள இக்காப்பியம் அறச்செல்வியாகத் திகழ்ந்த மணிமேகலையின் வரலாறு கூறுவதாகும். பௌத்த சமயத்தின் உயரிய கோட்பாடுகளை விளக்கும் ஒப்பற்ற காப்பியம் மணிமேகலை. பௌத்த சமயக் கொள்கைகளைக் கூறுவதோடு நின்று விடாமல் பசி ஒழிப்பு, சிறை ஒழிப்பு, மது ஒழிப்பு, பரத்தமை ஒழிப்பு போன்ற பல சமுதாயச் சீர்திருத்தங்களின் களஞ்சியமாகவும் விளங்குகிறது. அன்பைப் போதிப்பதும் அறத்தை வலியுத்துவதும் இதன் நோக்கங்கள்.

**மணிமேகலையின் அழகு:**

மணிமேகலை பேரழகு படைத்தவள். இதனைச் சுதமதி மணிமேகலையின் கண்களினின்று கண்ணீர் விழுந்தால், காமக்கடவுள் காமன், தன் படையைக் கீழே எறிந்து விட்டு உடல் நடுங்குவான் என்றும்,

**'ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ**
**பேடிய ரன்றோ பெற்றியின் நின்றிடின்'**

என்றும் கூறுவதால் அறியலாம்.

மலர்வனம் சென்ற போது மணிமேகலையின் தவ வடிவு கண்டோர், அணிகலன் இல்லாது அருந்தவத்தில் புகுத்திய தாயோ கொடியவள், தகவிலள் என்றும் கூறுவதாலும், ஆபுத்திரன் நாட்டைந்த போது அவளைக் கண்டவர்கள் இவளுக்கு ஈடான அழகுடைய எந்தப் பெண்ணுமே இவ்வுலகத்தில் இருக்க முடியாது என்பதாலும் மணிமேகலையின் எழில் நலம் உள்ளங்கை நெல்லியெனப் புரிகிறது.

கோவலன் உற்ற படுகொலையைக் கேட்டு இவள் கண்ணீர் சொரிந்து புலம்புதலும் மணிபல்லவத் தீவில் தனித்திருந்த போது தனிமை ஆற்றாது சுதமதியை நினைத்து 'சுதமதி நீ எங்கே ஒளிந்து கொண்டாய், ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய் என்ற பதறலும் மனம் அவை மனம் நடுங்கவைக்கிறது. வல்லிருளும் கழிந்துவிட்டது. இவை மணிமேகலையின் மென்மையையும் அஞ்சும் தன்மையையும் காட்டுகின்றன.

**தவத்திற்கென்றே பிறந்தவள்:**

பெண்களை உயர்வுபடுத்தும் நோக்கம் இளங்கோவிடம் புலப்படுகிறது. மணிமேகலை மாதவி மகள். இவளுக்குக் கண்ணகியின் மகள் என்ற சிறப்பைக் கொடுப்பதும் மணிமேகலையை உதயணன் என்ற அரசர் குல மகன் மணக்க. விரும்பி வரும் போது அதனை விடுத்து அறப்பணி செய்ய விளைகிறாள். பரத்தையருக்கே உரிய ஆடவர் உறவை முற்றிலும் தடுக்கிறாள். மனிதனின் அத்தியாவசிய தேவை உணவு, உடை, இருப்பிடம். இதில் உயிர்கள் வாழ அவசியமான. உணவை மணிமேகலை வழங்குவதாகப் பாடுவது பெண்ணியத்தின் உயர்வை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மாதவி தன் மகள் மணிமேகலை தவத்திற்கென்றே பிறந்தவள் என்பதை,

**'அருந்தவம் படுத்த வல்ல வதியாவதும்**

**திருந்தாச் செய்கை தீத் தொழிற்படாஅள் '**
மணிமேகலை -33-37

**அறம் – விளக்கம்:**

அறம் என்பதற்கு விளக்கம் தரும் போது மக்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதே அறமாகும்.என்ற கருத்தினை மணிமேகலை நல்குகின்றது.

**”அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியுமுடையு முறையுளு மல்லது**
**கண்டதில்”** மணிமேகலை 25; 228-231

என்னும் தீவதிலகை கூற்றினால் அறியலாம்.

உண்டி கொடுத்தோரை உயிர்க் கொடுத்தோராக வாழ்த்துகின்றது மணிமேகலை. ஆருயிர்க்கு உணவிடுவதே நல்லறம் என்ற. விளக்கத்தையும் அளிக்கின்றது.

**' மக்கள் தேவர் என இருசார்க்கும்**
**ஒத்த முடிவின் ஒரறம் உரைக்கேன்**
**பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்**
**தவப்பெரு நல்லறம் சாற்றினர் '** மணிமேகலை 12; 116-119

என்று அறவணடிகள் மணிமேகலைக்குப் பகரும் அறவுரை குறிப்பிடுகின்றது. பசிப்பிணி தீர்த்தலே நல்லறம் என்பது மணிமேகலைக் காப்பியம் கூறும் அறக்கொள்கையாகும்.

உலக உயிர்கள் உயிர் வாழ உணவு தேவை. உணவின்றேல் உலக உயிர்கள் பசியால் துன்புறும். பாரகம் அடங்கலும் பசிப்பிணி நீங்க வேண்டும் என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டது.இக்காப்பியம்.

**'பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனுஞ் சுரக்கென '** மணிமேகலை ; 70-71

முதுகுடிப் பிறந்த வள்ளுவன் முரசறைவதாகக் காப்பியத் தொடக்கம் அமைந்துள்ளது.

பசி, பிணி, பகை ஆகிய மூன்றும் மக்களைத் துன்புறுத்துவன. நாட்டிற்கு இலக்கணம் கூறும் வள்ளுவர்,

**' உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு '** குறள் - 734

என்று விளக்கம் தருகிறார். இவை மூன்றும் நீங்கு மழையும் வளமும் பெற்று, மக்கள் வாழ வேண்டும் என்ற கருத்து தொடக்கத்திலே கூறப்பட்டுள்ளது.

**பசியொழிப்பு** :

பசி என்பது கொடுமையானது மட்டுமன்று. மற்றைய பிணிகளையெல்லாம் உண்டாக்கும் அதுவே ஒரு பிணியாகும். இந்தப் பிணியைத் தான் மனித வாழ்க்கையில் நிரந்தமாக ஒழிக்க முடியவில்லை.

**‘ வீடுதோ றிரந்தும் பசியறாது வருந்தும்**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன் ’**

என்று வள்ளலார் இப்பிணியின் கொடுமை யை எடுத்துரைக்கிறார். பிற பிணிகளெல்லாம் உடலுக்கு ஒரிரு துன்பம் விளைவிப்பன. ஆயின் பசிப்பிணியோ! பலப்பல துன்பங்களை விளைவிக்கும் கொடுமை வாய்ந்தது.

சமுதாய வாழ்வு நலமாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டுமானால் மக்களின் இன்றியமையாத தேவையான உணவு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். எல்லா வகையான தீமைகளுக்கும் அடிப்படையாக. இருக்கும் பசிப்பிணியைப் போக்க வேண்டுவது இன்றியமையாதது என்பதை சாத்தனார் வலுயுறுத்துகிறார். பசியினால் ஏற்படும் துன்பங்களை,

**‘குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாண்ணி களையும் மாணெழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்**
**இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது ’**

மணிமேகலை 76-81 என விளக்கிக் காட்டுகிறார்.

குடிப்பிறப்பு, சிறப்பு, கல்வி, நாணம், எழில்நலம் ஆகியவற்றைச் சிதைப்பதோடு கூட உரிமை மகளிரோடு பிறர் வாயிற்கடையில் இரந்து நிற்கவும் செய்வது பசிப்பிணி. இத்தகைய துன்பங்களைச் செய்வதால் பசியைப் பிணியாக உருவகம் செய்து ‘பசிப்பிணி என்னும் பாவி, என்று உருவகித்துக் கூறியுள்ளார். சாத்தனார் பசியின்

கொடுமையை 'அரும்பசி' என்றும் வயிறுகாய் பெரும்பசி என்றும் பல இடங்களில் அடைமொழிகளோடு எடுத்துரைக்கின்றார்

**அமுதசுரபி:**

பசிப்பிணியைப் போக்குவதற்குத் தீர்வாகச் சாத்தனார் கண்டது அள்ள அள்ளக் குறைபடாது உணவினை வழங்கும் அமுதசுரபி என்னும் அட்சயப் பாத்திரம். இது சிந்தாதேவியின் அருளால் ஆபுத்திரனுக்குக் கிடைத்தது. மக்களுக்கு அறப்பணி புரிக்கின்றது. பின்னர் மணிமேகலை கையில் இடம் பெற்று மக்களின் பசித் துன்பத்தைப் போக்குகின்றது.

**அமுதசுரபியின் அரும்பணி :**

அமுதசுரபி தெய்வப் பாத்திரம் என்றும் திப்பியமாவது என்றும் போற்றப்படுகிறது.'

**'வாங்குநர் கையகம் வருந்துதல்ல**
**தான் தொலை வில்லாத் தகைமையது** ' 14-15

என்றும்

**' நாடுவறங் கூரினு மிவ்வோடு வறங்கூடாது '**

மணிமேகலை - 13

என்றும் அதன் சிறப்பு பலப்படியாக விரித்துரைக்கப்படுகிறது. அமுதசுரபியால், மக்களுக்கு இடையறாது உணவு வழங்கப்படுகிறது. அமுதச்சுரபியின் ஆற்றலை,

**'ஐயக் கடினஞ அம்பால மருங்கோர்**
**தெய்வத் தந்தது திப்பிய மாயது**
**யானைத் திநோய் அரும்பசி கெடுத்தது**
**ஊனுடை மாக்கட் குயிர்மருந்திது** ' மணிமேகலை151-154

என்று மணிமேகலை மன்னனுக்கு எடுத்துரைக்கிறாள். அமுதசுரபி நல்லோர் கைக்குச் சென்றால் அதன் அறப்பயன் சிறக்கும்.

**மணிமேகலையின் அருளுணர்வு:**

காப்பியத் தலைவி மணிமேகலை அருள் உள்ளம் கொண்டவள். அன்பே வடிவமானவள். மக்களுக்குப் பணிசெய்தல் தன் கடன் என வாழ்ந்தவள். அறத்தின் ஈட்டிய செல்வம் அறவோரிடம் சேர்ந்து, அறஞ்செய்தற்குப் பயன்பட்டு அவர்பால் செல்வம் நாளும் பெருகுதல் போல ஆதிரை இட்ட அன்னம் மணிமேகலையின் கையிலிருந்த அமுதசுரபியை அடைந்து காணார், கேளார், கால்முடப்பட்டோர், பேணுநர் இல்லாதோர், பிணியற்றோர் ஆகிய பலர்க்கும் பயன்பட்டது.

**சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுதல்:**

மணிமேகலை காயசண்டிகை வடிவம் கொண்டு சம்பாதியின் கோயிலிருந்த அமுத சுரபியைக் கையிலேந்திக் கொண்டு, பசித்தவர்களுக்கு உணவளிக்க நகரத்தில் உள்ள சிறைச்சாலைக்குச் சென்றாள். அங்கு சென்று தண்டிக்கப்பட்டுப் பசியால் வருந்துவோரை அருளுடனும் இன்முகத்துடனும் இனிய மொழிகள் பேசி உணவளித்தாள். இதனைக் கேள்வியுற்ற அரசன், மணிமேகலையை நோக்கி என் மக்களைப் பசிக் கொடுமையிலிருந்து காக்க நான் என்ன செய்ய வேண்டும் என்றான், அதற்கு மணிமேகலை " சிறைச்சாலையில் உள்ள கைதிகளை விடுவித்து அவ்விடத்தை அறச்சாலையாக, மாற்ற வேண்டும் என்று கூறினாள். அரசனும் அவ்விடத்தைப் புண்ணியம் செய்யும் இடமாக மாற்றினாள் என்பதை,'

**'சிறையோர் கோட்டஞ் சீத்தகு னொஞ்சத்**
**அறவோர்க் காக்கு மறுவாழிய ரென'**

என்ற அடிகள் வழி அறியமுடிகிறது.

இக்காப்பியத்தில் ஒரு பெண் துறவி, அறச்செயல்களைச் செய்யும் நிலையில் எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றைத் தாங்கிக் கொண்டு மக்களுக்கு நற்செயல்களைப் புரியும் வகையில் படைக்கப்பட்டுள்ளார். மணிமேகலை, பெண்ணின் சீரிய செயலுக்கு எடுத்துக்காட்டாய் உள்ளாள்.

**முடிவுரை:**

மனிதநேயமென்னும் உயரிய பண்பாட்டினை விளக்கும் காப்பியம் மணிமேகலை. அன்பு தான் உலக ஒளி. அன்பு தான் மகா காவியம். பௌத்த சமயக் கொள்கையை எடுத்துரைப்பதன் வாயிலாக அன்பெனும் பண்பின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது. மக்களிடையே அன்பு வளர வேண்டும். ஏற்றத் தாழ்வுகள் நீங்க வேண்டும். குற்றங்குறைகள் அகல வேண்டும். மனித ஆற்றல்கள் உயர வேண்டும். மனித மதிப்புகள் போற்றப்படுதல் வேண்டும். பிறப்பில் உயர்வு தாழ்வில்லை. வாழும் வாழ்க்கை முறையே உயர்வை அளிப்பது. பாரகம் முழுவதும் பசிப்பிணி நீங்க வேண்டும். மக்களுக்குச் செய்யும் தொண்டே மாண்புடைய தொண்டு, தீமை செய்பவர்களையும் அன்பினால் திருத்துக என்று மனிதநேயம் போற்றும் காப்பியமாக மணிமேகலை விளக்குகிறது.

**துணைநூற் பட்டியல்:**

1.சரளா ராஜகோபாலன், முதற் பதிப்பு, 1993, காப்பிய மகளிர், ஒளிப் பதிப்பகம், சென்னை -18.

2.முனைவர் வெ.திருமேனி. முதற்பதிப்பு, 2023, இரட்டைக்காப்பிய மகளிர், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை-5.
3.முனைவர் வே.முத்துலக்குமி, முதற்பதிப்பு 2001, இலக்கியப்பொழில், அனிதா பதிப்பகம், திருச்சி 6.